குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 61/2017

அ.சா. 4

2025–ம் ஆண்டு நவம்பர் 26–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 4–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | தொழில் | |
| தந்தை பெயர் | அய்யாசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.57 மணி,

Accused A1 Vijayavarman, A2 Jayakumar Present. A3 Thangavel Died and Charge Abated. Advocate Mr. M.Raja present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நல்லகவுண்டம்பட்டியில் குடியிருந்து மீன் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். எனது வீடு மூன்றாவது தெருவில் உள்ளது. சுமார் 9 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 பன்னீர் வீட்டின் அருகே சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். பன்னீர் வீட்டின் கதவில் இருந்த கண்ணாடி உடைந்திருந்தது. யார் உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கு வேறு என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தனர்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 03.03.2016 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் எதிரிகள் மூவரும் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்று அங்கிருந்த அ.,சா.1–ற்கு சொந்தமான TN 54 F 8239 என்ற பதிவு எண் கொண்ட Scooty Plus வாகனத்தை கீழே தள்ளி சேதப்படுத்தினார்கள் என்றும் 1ம் எதிரி அ.சா.1 ன் வீட்டின் கண்ணாடி ஜன்னலை உடைத்தார் என்றும் 3ம் எதிரி அ.சா. 1 யை

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.26 18:01:15 +0530

பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும் 2ம் எதிரி பட்டியல் சாட்சி மீனா என்பவரை பார்த்து கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும் 2ம் எதிரி அ.சா.1 ன் கழுத்தில் கையால் கீறினார் என்றும் 3ம் எதிரி அ.சா.1 ன் நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் கையால் அடித்தார்கள் என்றும். எதிரிகள் மூவரும் சேர்ந்து பட்டியல் சாட்சி மீனா என்பரை கீழே தள்ளி கையால் அடித்து அ.சா.1 யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்துவிட்டு விசாரணையின்ள போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.00 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.26 18:01:18 +0530